**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிதியத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப்பேரேடு, நாளேடு, நாளேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற முக்கிய கணக்கீட்டு அறிக்கைகளை பேணுதல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது, காசுப் புத்தகங்களைத் தவிர, அதனுடன் தொடர்புடைய பேரேட்டு கணக்குகள், நாளேடு உட்பட கணக்குப் புத்தகங்கள் பராமரிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் பேரேட்டு கணக்குகள் உட்பட ஏனைய புத்தகங்கள் பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முக்கிய கணககுப் புத்தகங்கள் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம் மொத்தக் கிரயம் ரூபா 126,255,800 ஆன நிலாவெளி பயிற்சி நிலைய கட்டிடத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச் காணி, காணி மற்றும் கட்டிடமாக தனித்தனியாக இனங்காணப்படாமையின் காரணமாக கட்டிடத்தின் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலைய கட்டிடம் மற்றும் காணி என்பன இவ்வருடத்திற்குள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமானத் தேய்வை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் கீழ் அலுவலக உபகரணங்களாக 13 மாவட்டங்களுக்கான மொத்தம் ரூபா 1,248,798 அடையாளம் காணப்படாத மீதியொன்று 1998 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட மீதியாகக் காட்டப்பட்டுள்ளது. அந்த சொத்துக்களின் வருடாந்த தேய்மானப் பெறுமதி ரூபா 10,452 ஆக இருந்ததுடன் வும், திரண்ட தேய்மானப் பெறுமதி ரூபா 1,154,725 ஆக இருந்தது. | அடையாளம் காணப்படாத மீதியாக முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட மீதிகள் மாவட்ட வாரியாக சரிபார்க்கப்பட்டு எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். | செசாத்துக்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 அன்று செலுத்த வேண்டிய பயணச் செலவுகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 46,598 மற்றும் 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படாது மீதமுள்ள பயனாளி விண்ணப்பங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 8,784,247 அட்டுறு செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்படாத காரணத்தால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 8,830,845 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட திகதி வரையிலான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் பயணச் செலவுகள் ரூபா 63,030 ஆனது 2021 இன் இறுதிக் கணக்குகளின் மூலம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான அனைத்து செலவுகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் திணைக்களத்தின் சொத்துக்கள் | 2016 மார்ச் 31 ஆம் திகதிய | நிதியத்திற்குரிய சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டதுடன் நிதியத்திற்கான சொத்துக்களை அடையாளம் காணும் வகையில் கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படவில்லை. அதன் பிரகாரம் ரூபா 30,953,398 ஆன சொத்துக்களை (நிலாவெளி தவிர்த்து) சான்றுறுதிப் படுத்த முடியாதிருந்தது. | 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | அடையாளம் காணும் வகையில் கணக்கெடுப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கபபட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் கோவிட் மானியங்களை வழங்குவதற்குத் திணைக்களத்திற்குத் தேவையான பணத்தை வழங்குவதற்கு நிதியத்திற்கு சொந்தமான மொத்த பெறுமதி ரூபா 2,848,689,752 ஆன 2 முதலீட்டுச் சான்றிதழ்கள் பிணையாக வைக்கப்பட்டு கடன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. இக்கடன் தொகை பெறுவனவு மற்றும் திணைக்களத்திற்கான கொடுப்பனவு தொடர்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் கணக்கு குறிப்புக்கள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் வரையில் 02 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் கடன் தொகையை தீர்ப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நிலையான வைப்புத்தொகையை விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | சமூக பாதுகாப்பு நிதியத்தில் இருந்து இலங்கை வங்கிக் கிளையில் இரண்டு நிலையான வைப்புக்களை வங்கிக் காப்பீடாக வைக்கப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இக்கடன் தொகை பெறப்பட்டுள்ளது. எனவே, சமூக பாதுகாப்பு நிதியத்தின் கணக்குகளில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளாக கணக்கிடப்படவில்லை. | நிதியத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை. 135 மற்றும் நி.பி 381(1) | நிலாவெளி பயிற்சி நிலையத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப்படாமலேயே மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு முதல் வங்கி நடைமுறைக் கணக்கொன்று பேணப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரை திறைசேரி அங்கீகாரம் பெறப்படவில்லை. | இது குறித்து நிலாவெளி பயிற்சி நிலையங்களில் விசாரித்து,அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக்கோவையின் 4.2.1 | பெறுகை திட்டமொன்றைத் தயாரிக்காமல், மீளாய்வாண்டில் ரூபா 25,569,637 ஆன பொருட்கள் கொள்வனவு மற்றும் ரூபா 1,390,660 ஆன நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மிகுதி கொள்வனவுகளுக்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பிரகாரம் பெறுகை திட்டமொன்றைத தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,518,333,556 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 641,568,935 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 876,764,621 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பயனாளிகளுக்கான கொடுப்பனவு அதிகரித்தமை மற்றும் முதலீட்டு வருமானம் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூகப் பாதுகாப்பு நோக்கங்களுக்காக பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கணினிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2019 யூலை 8 அன்று விலைமனுக் கோரப்பட்டது. 2020 திசெம்பர் 14 அன்று ரூபா 9,275,200 ஆன கணினி உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு பெறுகைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, 2021 பெப்ரவரி 02 ஆம் திகதி பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தும் அதற்குத் தேவையான கணினிகள் 2022 பெப்ரவரி 03 ஆம் திகதி வரை தாமதமாகி இருந்தன. கணினிகள் வாங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணினி உதிரிப்பாகங்கள் நிறுவனத்தின் பணிகளுக்கு பயன்படுத்தப்பட முடியாமல் ஓராண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | இக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றினால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத காரணங்களினால், இந்த கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்த நிறுவனத்தின் மூலம் ஏற்பட்ட தாமதம் மற்றும் இந்த 308 கணனிகளை பிரதேச செயலகங்களுக்கு வழங்குவதற்கு முன்னர் அவற்றின் செயற்பாடு தொடர்பாக பரிசோதித்து வழங்கப்பட வேண்டியிருந்தமை இத்தாமதத்திற்கு காரணமாக இருந்தது | தேவைக்கேற்ப கொள்வனவு செய்து, விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஆளாகாத வகையில்,இந்த நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2) இன் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் செயலாற்றல் அறிக்கையுடன் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 03 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் இறுதிக் கணக்குகள் 2022 மார்ச் 09 ஆந் திகதியும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் 2022 மார்ச் 28 ஆந் திகதியும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் உரிய காலத்தில் கணக்குகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1) இன் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சமூக பாதுகாப்பு நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டிலிருந்து பாதீடு தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் உரிய காலத்தில் பாதீடு தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |